23.01.2026 OS.No.179/2021 DW1 Name :.**சிவலிங்கம்**

குறுக்கு விசாரணை

1. முனிசாமிகவுண்டருக்கு 6 வாரிசுகள். முனியம்மாள், கிருஷ்ணமூர்த்தி, மணி, மற்றொருமகன் இறந்துவிட்டார் அவர் பெயர் தெரியவில்லை பெரியசாமி, ராணி ஆவார்கள். கண்ணுகவுண்டர், முனிசாமிகவுண்டர், சுப்பிரமணிகவுண்டர் ஆகியோர்கள் 1974ல் பாகபிரிவினை ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அதை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை வாதி மறைத்து வைத்துள்ளார் என பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.
2. வாதியிடம் அந்த ஆவணத்தின் அசல் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியிடம் அசல் ஆவணம் உள்ள விவரம் தெரிந்துக்கொண்டு வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவழியில் போர் போடபட்டுள்ளது. குறிப்பாக சர்வே எண் தெரியாது. போர் போட்டுள்ள பகுதி நாகராஜிக்கும் செல்வராஜிக்கும் சொந்தமான சொத்து என்றும் அது பொதுவழி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.
3. வழிபாதை சர்வே எண். 144ல் மட்டும் செல்கிறது. சர்வே எண். 144 பல உட்பிரிவாக பிரிக்கபட்டுள்ளது என்பது தெரியும். பாகபிரிவினை பத்திரத்தில் முனிசாமிக்கு எ பாகமும், கண்ணுகவுண்டருக்கு பி பாகமும், சுப்பிமணிக்கு சி பாகமும் ஒதுக்கபட்டது தெரியும். பாகபிரிவினை ஆவணத்தில் காணாற்றிலிருந்து கிழக்கு வரை

வழிபாதை குறிப்பிடபட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3ஆம் பக்கத்தில் அது தொடர்பான குறிப்பு உள்ளது.

4. காணாற்றிலிருந்து வாதியின் நிலம்வரை அந்த வழிபாதை தொடர்கிறது என்றால் பொதுகளம் வரை மட்டும் உள்ளது. காணாற்றிலிருந்து வாதியின் நிலம்வரை வழி உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை விவரம் தெரியும். அதனுடன் தாக்கல் செய்துள்ள வரைபடம் விவரமும் தெரியும். அந்த வரைபடம் சர்வே எண்.144ற்கானது என்றால் சரிதான். காணாறு மேற்கிலிருந்து ஆரம்பிக்கிறது. வரைபடத்தில் வழிக்கான குறிப்புகள் எதுவும் இல்லை.

5. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண். 144 என்பது 26 உட்பிரிவுகளாக பிரிக்கபட்டுள்ளது என கூறியுள்ளார் என்றால் 15 உட்பிரிவுகளாக உள்ளது. வாதிக்கு அவரது தகப்பனார் சொத்துகளை செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண்.144/7எ2 சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 13 செண்ட் என்றால் சரியல்ல. அதேபோன்று சர்வே எண். 144/7எ3-ல் 21 செண்ட் சொத்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தவறாகும்.

6. பிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கு அவரது தகப்பனார் எந்த செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதவில்லை என கூறியுள்ளேன் என்றால் அது தெரியாது. பொதுவழியில் செலவு செய்து போர் போட்டுள்ளது எவ்வளவு தொகைக்கு என்றால் தற்போது அது நியாபகம் இல்லை. நானும் கிருஷ்ணமூர்த்தியும் முருகேசனும் கணேசனும் முனிரத்தினமும் கூட்டாக சேர்த்து போர் போட்டோம்.

ஒவ்வொருவரும் எவ்வளவு தொகை பாகமாக கொடுத்தோம் என்று தற்போது நியாபகம் இல்லை.

7. வாதியும் அவருடைய தம்பியும் சேர்ந்து போர் போட்டுள்ளார்கள் என்றும் நாங்கள் போர் போட்டதாக பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் எவ்வளவு தொகை என்ற விவரத்தை என்னால் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு சொந்தமான இடத்தில் தான் வாதியும் அவர் தம்பியும் போர் போட்டுள்ளார்கள் என்றும் அது பொதுவழி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. பாகபிரிவினை ஆவணத்தில் கண்ணுகவுண்டர் நிலத்தின் வழியாக வழி பாத்தியம் உள்ளதாக குறிப்புகள் இல்லை.

8. வாதியின் நிலத்திற்கு வடக்கில் என்னுடைய நிலம் உள்ளது. வாதியின் நிலத்திற்கும் என்னுடைய நிலத்திற்கும் நடுவில்தான் வழிபாத்தியம் உள்ளது. வாதியின் நிலம் உயர்ந்தும் என்னுடைய நிலம் தாழ்ந்தும் உள்ளது என்றால் வாதியின் நிலம்தான் தாழ்ந்து உள்ளது. உண்மையில் வாதியின் நிலம்தான் உயர்ந்து உள்ளது என்றால் சரியல்ல. காணாற்றிலிருந்து வரும் வழியை நாங்கள் அழித்துவிட்டோம் என்றும் அந்த இடத்தில் பொதுவழி எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

9. வாதி அவருடைய பாகத்தில் வந்த சொத்தில்தான் வழிபாத்தியம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வாதி போட்டுள்ள போரில் நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா பிரச்சனை தொடர்பாக வாதிக்கும் எங்களுக்கும் இடையில் அடிக்கடி பிரச்சனை ஏற்படுகிறது. அந்த பிரச்சனையில் நான்கொடுத்த புகாரில் வாதி மீது வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது. என்னுடைய செல்வாக்கை

பயன்டுபத்தி வாதிக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

10.புகார் தேதியிலிருந்து 2, 3 மாதம் கழித்து நான் சிகிச்சை எடுத்ததாக கூறி அந்த பொய்யான வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியிடம் உள்ள ஆவணத்தை திரும்ப பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்தில் தவறான சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடக்கில் வாதிக்கு வழிவிடாமல் நான்தான் தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. களத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பு இல்லை என்றால் சரியல்ல உள்ளது.

11.வாதி களத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. குழந்தைகவுண்டரிமிருந்து நான் எழுதிவாங்கியுள்ள முச்சிலிக்கா வழக்கு தொடர்பானது கிடையாது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள முச்சிலிக்கா விவரங்களை எதிர்வழக்குரையில் குறிப்பிடாமல் நான் கூறியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை பாகபிரிவினை ஆவணத்தை வாங்குவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12.வாதியின் சொத்தில் ஏற்படுத்தியுள்ள வழியை பொதுவழி என மோசடியாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள வழி வாதியின் நிலத்தில் கிடையாது என்றால் சரியல்ல. வாதியை வழியை ஆக்கிரமிப்பு செய்வதற்காக அவருடன் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தில்

எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் கிராம வரைபடத்தில் பொதுவழிக்கான குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. வாதியை அடிக்கடி சட்டத்திற்கு புறம்பாக பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 23/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.23 16:11:04 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.